# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் 330/மா/2025**
**நாள் 26.03.2026**

G. சாந்தி
மதுரை ––– முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர், மண்டலம் 3
மதுரை மாநகராட்சி ––– எதிர்மனுதாரர்

மதுரை–1, மேலமாசி வீதி, தட்டார சந்து, கதவு எண் 16A என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி G. சாந்தி என்பவரின் 21.08.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.08.2025 அன்று பெறப்பட்டு, 330/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை–1, மேலமாசி வீதி, தட்டார சந்து, கதவு எண் 16A என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி G. சாந்தி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 21.08.2025 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் குடும்பத்துடன் மதுரை மேலமாசி வீதி, தட்டார சந்து, 16– A–ல் குடியிருந்து வருகிறோம். எங்கள் வீட்டின் முன்பாக சிறிய அளவிலான வணிக கடை உள்ளது. மேற்படி கடைக்கு குப்பைவரியாக மாதம் 1–க்கு ரூ.1000/– வீதம் குப்பை வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டண பட்டியலில் வரிசை எண் 3 (l), பிரகாரம் விற்பனை அங்காடிகளுக்கு மாதம் 1–க்கு ரூ.200/– வீதம் குப்பை வரி விதிக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குப்பைவரியை மாதம் 1–க்கு ரூ.200/– வீதம் விதிக்கும்படி 11.06.2025 மற்றும் 31.07.2025 ஆகிய தேதிகளில் மனு கொடுத்தேன். என்னுடைய மனுவிற்கு மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 3, உதவி ஆணையாளர் அவர்கள் அனுப்பிய கடிதம் ந.க.எண்.ம3சி1/004174/2025, நாள் 05.08.2025–ம் தேதி கடிதத்தில் திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டண பட்டியல் பிரிவு–3 (க) பிரகாரம் மாதம் 1–க்கு ரூ.1000/– வீதம் குப்பைவரி விதித்திருப்பது சரியானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டண பட்டியலில் பிரிவு–3 (க) பிரகாரம் சிறுகுறு தொழில் நிறுவனங்களுக்கு மாதம் ரூ.1000/= வீதம் குப்பைவரி விதிக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எங்கள் கட்டிடத்தில் சிறிய வணிக கடை சிறுதொழிலோ, குறுதொழிலோ செய்யப்படவில்லை.

ஆகவே, உதவி ஆணையாளர் அவர்கள் உத்தரவை ரத்து செய்து, மாதம் 1–க்கு ரூ.200/– வீதம் குப்பைவரி விதிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும், விசாரணைக்கு நேரில் வருமாறு உத்தரவிடப்பட்டால் என் வயதின் காரணமாக எனக்கு

பதிலாக என் கணவரோ, எனது மருமகனோ நேரில் ஆஜராக அனுமதிக்கும்படி பணிவுடன் பிரார்த்திக்கிறேன்.''

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 24.09.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 3 உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) உதவி ஆணையாளர் தனது 12.11.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் ம3C1/005945/2025–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 24.09.2025 நாளிட்ட கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற மனு பரிசீலிக்கப்பட்டு, கள அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு அக்கட்டிடத்தின் வணிக உபயோகப் பகுதி 375 சதுர அடியாக உள்ளதாலும், மேலாண்மை பயனாளிகள் அட்டவணை 1ல் வணிகம் 3ல் வரிசை எண் ''ஐ''ன்படி மாதம் ரூ.200 வீதம் நிர்ணயம் செய்யப்பட்டு, மனுதாரருக்கு 29.10.2025ல் கடிதம் அனுப்பப்பட்டு மனுதாரரின் கோரிக்கையின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.''

4. மனுதாரர் தனது 14.01.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''நான் மேற்கண்ட முகவரியில் உள்ளேன். எனக்கு குப்பைவரி குறைப்பதற்காக ஆணையத்தில் மனு கொடுத்தேன். எனக்கு தற்பொழுது குப்பைவரி குறைக்கப்பட்டது என்ற தகவலை தங்கள் அலுவலகத்திற்கு தெரியபடுத்திக் கொள்கிறேன்.''

5. மனுதாரரின் மனு, கடிதம் மற்றும் மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) உதவி ஆணையாளரின் அறிக்கை ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை மேலமாசி வீதி, தட்டார சந்து, 16– A–ல் குடியிருந்து வரும் மனுதாரர் வீட்டின் முன்பாக சிறிய அளவிலான வணிக கடைக்கு குப்பைவரியாக மாதம் ரூ.1000/– வீதம் விதிக்கப்பட்டுள்ளது என்பதும், ஆனால் மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டண பட்டியலில் வரிசை எண் 3 (I)–ன்படி மாதம் ரூ.200/– வீதம் குப்பை வரி தனக்கு விதிக்கப்பட வேண்டுமென, மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அளித்த மனுவின் அடிப்படையில், மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் கட்டண பட்டியலில் வரிசை எண் 3 (க)–ன்படி மாதம் 1–க்கு ரூ.1000/– வீதம் குப்பை வரி விதித்தது சரி என மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி ஆணையாளர் தெரிவித்தார் என்பதும், ஆனால் வ.எண் 3(க) பிரகாரம் சிறுகுறு தொழில் நிறுவனங்களுக்கு தான் ரூ.1000/– குப்பை வரி என்பதும், தங்கள் கட்டிடத்தில் அவ்வாறு சிறு தொழிலோ இல்லை என்பதால், மதுரை மாநகராட்சி ஆணையரின் உத்திரவினை ரத்து செய்து மாதம் 1–க்கு குப்பை வரி ரூ.200/– நிர்ணயிக்குமாறு கோரியுள்ளது மனுதாரரின் மனு வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின் மனு மீது கள அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு அக்கட்டிடத்தின் வணிக உபயோகப் பகுதி 375 சதுர அடியாக உள்ளதாலும், மேலாண்மை பயனாளிகள் அட்டவணை 1ல் வணிகம் 3ல் வரிசை எண் ''ஐ''ன்படி மாதம் ரூ.200 வீதம் நிர்ணயம் செய்யப்பட்டு, மனுதாரரின் கோரிக்கையின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கையின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நிலையில், மனுதாரரின் முறையீட்டு மனு மீது கள அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு கட்டிடத்தின் 375 சதுர அடி உள்ள வணிக உபயோகப் பகுதிக்கு திடக்கழிவு மேலாண்மை பயனாளிகள் அட்டவணை 1ல் வணிகம் 3ல் வரிசை எண் ''ஐ''ன்படி மாதம் ரூ.200/– வீதம் நிர்ணயம் செய்யப்பட்டு விட்டதாக மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி ஆணையாளர் தெரிவித்துள்ள நிலையிலும், மனுதாரரும் குப்பைவரி ரூ.200/– ஆக குறைக்கப்பட்டது என

தெரிவித்துள்ள நிலையில், மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திருமதி. G. சாந்தி,
கதவு எண் 16–A,
தட்டார சந்து,
மேலமாசி வீதி, மதுரை–1.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

(3) உதவி ஆணையாளர்,
மண்டலம் 3 (மத்தியம்),
மதுரை மாநகராட்சி,
மதுரை–625 001.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ ஒருங்கிணைப்பாளர் ( Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.
1/4/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032